பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 சிறவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: வைகாசி 29 (11—6—68) செவ்வாய் ★ வெளியூர்: வைகாசி 30 (12—6—68) புதன் [இதழ்: 299

மண் வளம்--மன வளம் இங்கே உண்டு!

"மத்திய உணவு அமைச்சர் செகசீவன்ராம் தமிழ்நாட்டை இன்னும் கண்ணும் கருத்துமாகக் கவனித்தால் தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாகத் தஞ்சை திகழ்வதுபோல், இந்தியாவின் நெற்களஞ்சியமாகத் தமிழ்நாடு திகழும்! ஏனெனில், அதற்குத் தேவையான கடல் வளம், மண் வளம், மன வளம் முழுவதும் இங்கு நிரம்ப உள்ளது!"

--முதலமைச்சர் அண்ணா

(எண்ணூர் குளிர் சாதன நிலையத் திறப்புவிழாவில்)

தமிழகத்துக்கு டெல்லியின் அநீதி

'தமிழகத் தேசீயங்கள்' முகத்தில் கரி!

சரியான பாடம் புகட்டினார் அமைச்சர் செகசீவன் ராம்

தி. மு. க. ஆட்சி மீது வயிற்றெரிச்சல் காட்ட வேண்டாம் எனப் 'புத்திமதி'

சென்னை, சூன் 11 -

நேற்று 'சத்திய மூர்த்தி பவனில்' மத்திய அமைச்சர் செகசீவன்ராமுக்கும் —காங்கிரசு ஊழியர்களுக்குமிடையே கடுமையான வாக்குவாதம் நடைப்பெற்றிருக்கிறது.

"தமிழகத்திலும் ஆந்திரத்திலும் கொள்முதல் விலைகளில் உள்ள வேறுபாட்டினைக் காங்கிரசுக்கு எதிரான பிரசாரத்திற்கு தி. மு. கழகம் பயன்படுத்திக்கொள்கிறது; கழகத்தின் பிரச்சாரத்திற்குக் காங்கிரசு ஊழியர்கள் திறம்படப் பதிலளிப்பதற்காக மத்திய அரசின் உணவுக் கொள்கையை உணவு அமைச்சர் தெளிவாக விளக்கவேண்டும்" என்று அவர்கள் கேட்டுக் கொண்டனர்; அமைச்சர், அதற்குரிய முறையில் பதிலளித்திருக்கிறார்.

"தி. மு. கழக அமைச்சரவையை, மத்திய உணவு அமைச்சர் பாராட்டுவதேன் ?" என்று அவர்கள் திரும்பத் திரும்பக் கேட்டனர் :—

"ஒரு மாநில அரசு செய்யக்கூடிய நல்ல காரியத்தைப் பாராட்டுவது, எப்படித் தவறாகும்? நான் கேட்டுக்கொண்டபோது முதலமைச்சர் அண்ணாதுரை, கேரளத்திற்கு உணவுத்தானியம் அனுப்ப ஒப்புக்கொண்டுவிட்டதை நான் பாராட்டியது தவறானதா? முன்பும் பாராட்டியிருக்கிறேன்— எதிர்காலத்திலும் பாராட்டத்தான் செய்வேன்.

"தி. மு. க. அரசு, சட்டபூர்வமாக அமைக்கப்பட்ட அரசாகும். ஏதாவது நல்ல செய்கைகளைச் செய்தால், மிக நல்ல செய்கைகளைச் செய்திருக்கிறது' என்றுதான் நான் கூற வேண்டும். நல்ல செய்கைகளைப் பாராட்டுவேன்; ஏதாவது தவறு நடந்தால், கண்டிக்கவும் செய்வேன்"

என்று அமைச்சர் செகசீவன்ராம் கூறி, ஏற்றதோர் படிப்பினையை அவர்களுக்குப் புகட்டினார்.

ஊழியர்களின் கடமை என்ன?

"'மத்திய அரசின் கொள்கைகள் காரணமாகப் பருப்பு, சர்க்கரை விலைகள் குறைந்துவிட்டன; ரூபாய் மதிப்பைக் குறைத்தது தான் பண வீக்கத்துக்குக் காரணம்' என்றெல்லாம் தி. மு. கழகம், மத்திய அரசுக்கு எதிராகப் பிரசாரம் செய்துவருகிறது; இத்தகைய பிரசாரத்தை மத்திய அமைச்சர் முறியடித்து, 'காங்கிரசு ஊழியர்களும் அதுபோலச் செய்ய உதவ வேண்டும்" என்றெல்லாம் காங்கிரசுப் பெண் ஊழியர் முறையிட்டுக்கொண்டார்; உடனே அமைச்சர், இத்துறையில் காங்கிரசு ஊழியர்கள் மேற்கொள்ள வேண்டிய பணியினையும், பொறுப்பினையும் உணர்த்தினார்.

மதியழகன் ரோமுக்குச் சென்றதும் தவறு?

"அனைத்து நாட்டு உண[illegible]ப நிறுவன மாநாட்டுக்குச் சென்ற இந்தியத் தூ[illegible]அமைச்சர் கே. ஏ. மதியழகன் சென்ற[illegible]த்திற்குப் பயன்படுத்திக் கொள்ள[illegible]முறையிட்டுக் கொண்டபோ[illegible]

"இது [illegible]கும்; 'உணவு அமைச்சர்' என்ற[illegible] அதில் இடம் பெற்றிருந்தால், த[illegible] அவர், தமிழக மக்களால் தேர்ந்தெடுக்க[illegible]ஓர் அமைச்சராவார்.

"இன்று மத்தியில் காங்கிரசல்லாத அமைச்சரவை இருந்து, தூதுக் குழுவில் பிரதிநிதித்துவம் அளிப்பதில் ஒரு மாநிலத்தில் பதவியில் உள்ள ஒரு காங்கிரசு அரசை ஒப்புக்கொள்ளாவிட்டால் உங்களுக்கு எப்படியிருக்கும்?"

என்று அமைச்சர் செகசீவன்ராம் சுடச்சுடப் பதிலளித்து, கேள்வியின் உள்நோக்கத்தை எள்ளிநகையாடினார்.

ஒரு கண்ணில் வெண்ணெய்-- மற்றொரு கண்ணில் சுண்ணாம்பா?

குசராத் மாநிலத்துக்கு அளித்த அனுமதி தமிழகத்திற்கு இல்லை

புதுடிலலி, சூன் 11---

குசராத் மாநில மின்கழகம் தனது துவாரன் மின்நிலையத் திட்டத்துக்குத் தேவையான மின்சார உற்பத்தி இயந்திரங்களை வெளிநாட்டிலிருந்து தருவித்துக்கொள்ள டெல்லி அரசிடமிருந்து அனுமதியைப் பெற்றுவிட்டது; ஆனால் அதே நேரத்தில், தமிழக உரத் தொழிற்சாலைக்குத் தேவையான இரண்டு கொதிகலன்களை (பாய்லர்) திருவெறும்பூர் கொதிகலன் தொழிற்சாலையிலிருந்தே பெற்றுக்கொள்ளுமாறு டெல்லி அரசினால் கூறப்பட்டிருக்கிறது.

சென்னை உரத் தொழிற்சாலைக்கு தேவையான கொதிகலன்களை வெளிநாட்டிலிருந்து தருவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை மத்திய அமைச்சரவைக் குழு பரிசீலித்ததாம். 'வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யத் தேவையில்லை' என்று முடிவு செய்யப்பட்டதாம்.

இந்த உரத் தொழிற்சாலையை உருவாக்கிவரும் அமெரிக்க நிறுவனமான 'கெமிக்கல் கன்ஸ்டரக்ஷன்கார்ப்பொரேஷனி'ன் ஒப்பந்தத்திலேயே, கொதிகலன்களை இறக்குமதி செய்வது குறித்த நிபந்தனை ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதையும் உரத் தொழிற்சாலை அதிகாரிகள் விண்ணப்பத்தில் சுட்டிக் காட்டியிருக்கின்றனர்.

இறக்குமதிக்கு அனுமதி மறுக்கப்பட்டதால், உரத் தொழிற்சாலை அதிகாரிகள், தங்கள் தேவைக்கான 'ஆர்டரைக் கொடுப்பதற்காகத் திருவெறும்பூர் கொதிகலன் தொழிற்சாலையுடன் தொடர்பு கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே அரசாங்கமும், திருவெறும்பூர் தொழிற்சாலையில் உரத்தொழிற்சாலைக்கான கொதிகலன்களை உருவாக்குவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு கேட்டுக்கொண்டிருக்கிறதாம்.

'நீண்டகாலத் தேவை நிறைவு பெறுகிறது'

முதலமைச்சர் அண்ணா பெருமிதம்

சென்னை, சன. 11—

"ஆழ்கடல் மீன்பிடிப்புக்குப் போதிய வசதிகள் இல்லாததன் காரணவாக, மீன் வளத்தில் நூற்றில் ஒரு பங்கைக்கூடத் தமிழகம் பயன்படுத்திகொள்ள முடியவில்லை; இதன் காரணமாகவே எண்ணூரில் கப்பல் டீசல் எண்ணெய்த் தொழிற்சாலை ஒன்றை ஜப்பான் ஒத்துழைப்புடன் நிறுவ உத்தேசிக்கப்பட்டிருக்கிறது"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், எண்ணூரில் தமிழக அரசு புதிதாக அமைத்துள்ள மீன் பதனிடும் குளிர்சாதன நிலையத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் விளக்கினார்.

ஏ. கோவிந்தசாமி வரவேற்புரை

விழாவுக்கு வந்திருந்தவர்களை விவசாய—மீன் துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் வரவேற்றுப் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

'இந்த நிலையம் ரூ. 5 இலட்சம் செலவில் கட்டப்பட்டிருக்கிறது; நாள்தோறும் 3 டன் மீன்களை இங்கு ப[illegible]ம் செய்யமுடியும்; 50 டன் மீன்களைப் பாதுகாக்க முடியும். இதனால் அரசுக்கு ரூ. 1 கோடி வரையில் அந்நியச் செலாவணி மிச்சமாகும்.

"தூத்துக்குடி, மண்டபம் ஆகிய இடங்களில் இதுபோன்ற நிலையங்கள் நிறுவப்படும்."

விழாவில்கலந்துகொண்ட உணவுத்துறை அமைச்சர் கே. ஏ. மதியழகன், ஏ.கே.ஏ. அப்துஸ் சமது எம்.பி. ஆகியோரும் பேசினர்.

முதலமைச்சர் அண்ணா

மீன் உறைய வைப்பு நிலையத்தைத் துவக்கிவைத்து முதலமைச்சர் அண்ணா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"நமது நாட்டில் நாம் இன்னும் கடல்வளத்தைப் போதிய அளவு பயன்படுத்தவில்லை; அதை இப்போது உணர்ந்து, அத்துறையில் விஞ்ஞான முறையில் பயன்படுத்தும் எண்ணம் கொண்டிருக்கிறோம்.

மீன் வளத்தைச் சரியான முறையில் பயன்படுத்துவதன் மூலம், நம் நாட்டின் உணவுப் பற்றுக் குறையைப் போக்க முடிவதுடன் நாட்டுச் செல்வத்தையும் பெருக்க முடியும். இது சம்பந்தமாக நான் உணவு அமைச்சர் செகசீவன்ராமிடம் ஒத்துழைப்புத் தருவதாகக் கூறினேன்.

தமிழ் நாட்டில் உணவு உற்பத்தியில் நாம் ஓரளவுக்கு முன்னேற்றம் பெற்றிருக்கிறோம் என்றால், அதற்குக் காரணம் நமது விவசாயிகளின் உழைப்பு—அமைச்சர்களின் மேற்பார்வை—இலாகாவின் திறமை முதலியவை என்றாலும், மத்திய உணவு அமைச்சர் செகசீவன்ராம் அவர்கள், நமக்கு ஆதரவு அளிக்கும் வகையில் அளித்த ஊக்கம்தான் முக்கிய காரணமாகும்.

"இந்த நிலையத் திறப்பு விழாவின் மூலம், தமிழகத்தின் நீண்ட காலத் தேவை நிறைவு பெறுகிறது"

"நவீன முறைகளைக் கொண்டு உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு மத்திய உணவு அமைச்சர் ஊக்கமும் ஒத்துழைப்பும் அளிப்பதற்காக நன்றிதெரிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

நீதிமன்ற மொழியாகத் தமிழ்

திருச்சி, சூன் 11—

"தமிழகத்தில் சட்டச் சொற்களைத் தமிழில் மொழிபெயர்க்கும் வேலை துரிதமாக நடந்து வருகிறது; தமிழில் சட்டச் சொல்லகராதி விரைவிலேயே வெளியிடப்படும்"

என்று, சட்டத் துறை அமைச்சர் திரு. செ. மாதவன், இங்கு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மாவட்ட நீதிமன்றங்களில் சாட்சியங்களைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் பதிவு செய்யலாம் என்று உயர் நீதிமன்றத்துக்கு அரசு யோசனை தெரிவிள்ளதாகவும், இதுபற்றி உயர் நீதிமன்றம் விரைவில ஆணை பிறப்பிக்கும் என்றும் அவர் மேலும் கூறினார்.

தமிழைப் பயிற்சிமொழியாக்குவதை தமிழக அரசு ஊக்குவிக்கிறது

கற்றுத் தேறியவர்களுக்கு வேலைவாய்ப்பு

நிலைமைகளை விளக்கிக் கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன்

மதுரை, சூன் 11—

"கல்லூரிகளில் தமிழைப் பயிற்சிமொழியாக்கும் கொள்கையைத் தமிழக அரசு ஊக்குவித்துவருகிறது.

"தமிழைப் பயிற்சிமொழியாகக் கொண்டு கற்றுத் தேறிய பட்டதாரிகளுக்கு, ஆங்கிலம் அவசியமாக இல்லாத சிறை – கதர்—அறநிலையம் போன்ற துறைகளில் வேலை தருவதில் சலுகை அளிப்பதெனத் தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.

"'தமிழைப் பயிற்சிமொழியாகக் கொண்டு கல்வி கற்றால் வேலை வாய்ப்பு இருக்காது' என்ற அச்சத்தை நீக்கும்வகையில் தமிழக அரசு இந்த முடிவைச் செய்திருக்கிறது.

என்று கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், விஞ்ஞானப் பாடங்களைத் தமிழில் கற்பிக்கவிருக்கும் புகுமுக (பி யு சி.) ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பைத் துவக்கிவைத்துப் பேசுகையில் தெள்ளத் தெளிவுறத் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"கல்லூரிகளில் தமிழ் மொழியைப் பயிற்சி மொழியாக்கியதில் எந்த அரசியல் நோக்கமும் இல்லை.

இந்தப் பணியில் ஆசிரியர்களின் பங்கு கடினமானது. ஆனால் எப்படியும் இந்தத் துறையில் முயற்சி துவக்கப்படவே ஆக வேண்டும்.

ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைக் கண்டுபிடிப்பதில் ஒரு சங்கடமும் இல்லை.

உலக மொழிகளிலேயே தமிழ் மொழியில்தான் ஆதாரச் சொற்கள் அதிகம்; எனவே, விஞ்ஞானப் பதங்களுக்குத் தகுந்த சொற்கள் கிடைக்கும்.

ஆங்கிலத்தில் படித்தாலும் மாணவர்கள் தமிழிலேயே தேர்வு அனுமதிப்பது என்று சென்னைப் பல்கலைக் கழகம் முடிவு செய்திருக்கிறது.

விஞ்ஞானத் தொழில் நுணுக்க நூல்களைத் தமிழில் மொழி பெயர்ப்பதற்காக 5 ஆண்டுகளுக்கு மத்திய அரசு ஒரு கோடி ரூபாய் வழங்கியிருக்கிறது; இதில் கால் பங்கு செலவைத் தமிழக அரசு ஏற்கும்."

கடமையினின்று வழுவாதீர்!

பொறுப்பு நம்மிடை மிகுந்திட வேண்டும்

"சனநாயகத்தைச் சீர்குலைத்து வன்முறை வெறிச் செயலில் ஈடுபடும் காங்கிரசுக்காரர்கள், கழகத்தை அழித்தொழித்து விடத் திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறார்கள்!

"இந்த நேரத்தில்தான் கழகத் தோழர்கள், தங்கள் கட்டுப்பாடு – கடமை – கண்ணியம் ஆகியவற்றினின்றும், சிறிதளவும் வழுவக்கூடாது! பொறுப்புக்களை உணராமல் இருந்து விடக்கூடாது! ஆட்சியை ஏற்றுக்கொண்டுவிட்ட பிறகுதான் நமக்கும் பொறுப்புகள் அதிகம்!

"எதிர்க் கட்சியாக இருந்த போதும் நாம் அடிபட்டோம்—அது வீரம்! ஆளும் கட்சியான பிறகும் அடிபடுகிறோம் என்றாலும், அதையும் தாங்கிக் கொண்டு அமைதி காப்பதே வீரம்! அந்த அளவுக்குப் பொறுப்பும் கடமையும் நம்மிடை மிகுந்திட வேண்டும்!"

—பொதுப் பணித்துறை அமைச்சர்

மு. கருணாநிதி

(திருச்சி கூட்டத்தில்)

தவறான எண்ணத்தை ஏற்படுத்தக் காங்கிரசுக் கட்சியினர் முயற்சி!

பொய்ப் பிரச்சாரம் எத்தனை நாளைக்கு நிலைக்கும் என்பதைச் சிந்திக்க வேண்டாமா?

"'உலகத் தமிழ் மாநாட்டுக் கணக்கு எங்கே' என்று தமிழ்நாட்டுக் காங்கிரசுத் தலைவர் சி சுப்பிரமணியம் கேட்டார்; அண்ணா அவர்கள் புள்ளிவிவரங்களைத் தந்து, 'முழு விவரம் விரைவில் வெளியிடப்படும்' என்றார்.

"எங்களிடம் கணக்குக் கேட்கிறார்கள்; அவர்களுடைய கணக்கைக் காட்டவேண்டாமா? 'நேரு நினைவு நிதி' என்ற பெயரால் ரூ. 40 இலட்சம் வசூலிக்கப்பட்டதே—அதற்கான கணக்கு விவரம் எங்கே? போர் நிதிக்காக வசூலிக்கப்பட்ட கணக்கு விவரம் என்ன ஆயிற்று?

"போர் நிதிக்காக தங்கமும் நகையும் தரப்பட்டு பட்நாய்க்கிடம் விமானம் வாங்க ஒப்படைக்கப்பட்டதில் ஊழல் நடந்ததாகப் பாராளுமன்றத்திலே குற்றஞ்சாட்டப்பட்டது. எங்களிடம் கணக்கு கேட்பவர்களே—இதற்குக் கணக்கு எங்கே?

"'பைல்'கள் அங்கேதான் இருக்கின்றன; நீங்களே பார்த்துக் கொள்ளலாமே' என்கிறார் முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம்; எங்களைப் பார்க்கச் சொல்பவர்கள் ஏன் இத்தனைக் காலமாக இந்தக் கணக்குகளை நாட்டு மக்களுக்குத் தெரிவிக்கவில்லை?

"'நேரு நினைவு நிதி கணக்கு எங்கே என்று எங்களிடம் கேட்கிறாயே—அந்த நிதியைத் தமிழ்நாடு காங்கிரசா திரட்டியது? எங்களிடம் கணக்கு கேட்கலாமா?' என்று அவர்கள் கேட்கிறார்கள்.

"இதையே எங்களால் திருப்பிச் சொல்லமுடியாதா?—'உலகத் தமிழ் மாநாட்டை திராவிட முன்னேற்றக் கழகமா நடத்தியது? எங்களிடம் கணக்கு கேட்கலாமா?' என்று நாங்களும் சொல்லலாம்; ஆனால் அப்படிக் கேட்க நாங்கள் விரும்பவில்லை; காரணம், கணக்குத் தயாராக இருக்கிறது!

"எதற்கும் பகிரங்கமாகக் கணக்குக் காட்டிப் பழக்கப்பட்டவர்கள் நாங்கள்; இங்கே தரப்பட்ட ஒவ்வொரு காசுக்கும், 'நம் நாடு', 'முரசொலி'யில் கணக்கு விவரம் வெளிவரும்; இதை நாடறியும்.

"இதை உணராது ஏதாவது சொல்லி மக்களிடத்தில் கழகத்தைப் பற்றித் தவறான எண்ணத்தை ஏற்படுத்தக் காங்கிரசுக் கட்சியினர் முயற்சி செய்துவருகிறார்கள். இத்தகைய பொய்ப் பிரச்சாரம் எத்தனை நாளைக்கு நிலைக்கும் என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்!"

—அமைச்சர் மு. கருணாநிதி

(திருச்சி கூட்டத்தில்)

பண்பாட்டை இழந்துவிட்டது காங்கிரசுக் கட்சி!

திருச்சி, சூன் 11—

"தூத்துக்குடித் துறைமுகத் திட்டம் பொதுப் பிரச்சினை; இத்திட்டத்திற்காக ரூ. 24 கோடி திட்டமிடப்பட்டு—ரூ. 5 கோடி செலவிடப்பட்டு—'அது முடியாது' என்று மத்திய அரசு தீர்ப்பு எழுதும் போகும் நேரத்தில் நாம் 'எழுச்சி நாள்' கொண்டாடி—தூத்துக்குடித் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்' என வலியுறுத்தி — தமிழகமெங்கும் கோரிக்கை எழுப்பினோம்; இன்றையதினம் அந்தக் கோரிக்கை வெற்றி கண்ட திட்டமாக இருக்கிறது!

"எழுச்சி நாள் கொண்டாடிய போதுகூட கலந்துகொள்ளாத காங்கிரசுக்காரர்கள், இப்போது, 'கறுப்புக் கொடி' காட்ட முற்படுகிறார்கள் என்றால் என்ன பொருள்?

"மத்திய அமைச்சர் வி. கே. ஆர். வி. ராவும், நானும் தூத்துக்குடித் துறைமுகத் திட்டங்களையும், அது செயல்படும் நிலைமையையும் கண்டறியச் சென்றோம்: அனைத்துக் கட்சிகளின் சார்பிலும், வரவேற்பு அளிக்கப்பட்டன; ஆனால் அந்த வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொள்ளாத ஒரே கட்சி பரிதாபத்துக்குரிய காங்கிரசுக் கட்சிதான்; நான் வி. கே. ஆர். வி. ராவுடன் சென்றிருந்தேன் வரவேற்கத்தக்க அவர்கள் கலந்துகொள்ளவில்லை. இது பண்பாட்டை— அரசியல் நாகரிகத்தைக் காங்கிரசுக் கட்சி எந்த அளவுக்கு இழந்துவிட்டது என்பதை எடுத்துக் காட்டுகிறது!"

—பொதுப் பணி அமைச்சர்

—மு. கருணாநிதி

(திருச்சி கூட்டத்தில்)

சமுதாயத்தின் அடிதளத்தில் அழுந்திக் கிடக்கும் மக்கள்

வாழ்க்கை நிலை உயரத் தமிழக அரசு ஆக்கபூர்வமாகச் செயலாற்றும்

"நாட்டின் பெரும்பாலான மக்கள், சமுதாயத்தின் அடிதளத்தில் அழுந்திக் கிடக்கின்றனர்; அவர்களது வாழ்க்கையை உயர்த்திடக் கழக அரசு, ஆக்கபூர்வமான பல திட்டங்களைத் தீட்டி, அதனை நடைமுறைக்குக் கொண்டுவரச் சிந்தித்து — முயன்றுகொண்டிருக்கிறது!

"இந்தச் சிந்தனைக்கும் முயற்சிக்கும் உயிரூட்டம் தருவதற்கு மக்கள் அனைவரும் முன்வரவேண்டும்.

"மக்களுக்கு நன்மை தரக்கூடியதும், தேசிய முறையில் அனுசுக்கூடியதுமான கோரிக்கைகளைக் கழக அரசு அனுதாபத்துடன் கவனித்து ஆவன செய்யும்."

—கே. ஏ. மதியழகன்

(தென் சென்னை டாக்சி — மோட்டு வண்டித் தொழிலாளர் முன்னேற்ற சங்க ஆண்டு விழாவில்)

(2-ம் பத்தி தொடர்ச்சி)

துறை அமைச்சர் மாதவன் அவர்களும், இயந்திரமயமாக்கும் கொள்கைக்கு எதிராகத் தங்கள் கருத்துகளை ஏற்கனவே தெரிவித்துள்ளனர்; தமிழக அரசு தற்போதைய நிலையில், இயந்திர மயமாக்கும், கொள்கைக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கிறது.

மத்திய அரசு இப்பிரச்சினையை மீண்டும் பரிசீலனை செய்து, இயந்திர மயமாக்கும் திட்டத்தை அமுலாக்கும் முயற்சியை கைவிடும் என்று நம்புகிறோம்.

கோவையை, 'பி' வகுப்பு நகரமாக உயர்த்த மாநில அரசு தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் என்று உறுதி கூறுகிறேன்."

பொதுமக்கள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டது

அமைச்சர் — இயக்குநருக்கு நன்றியறிவிப்பு

திருவான்மியூரிலிருந்து துறைமுகம் வரையிலும், திருவான்மியூரிலிருந்து எழும்பூர் வரையிலும் இரு புதிய பேருந்து தடங்கள் ஏற்படுத்தவும், 19-சி பேருந்து தடத்தில் கூடுதலாகப் பேருந்து விடவும் பொதுமக்கள் சார்பில் தமிழக அரசுப் போக்குவரத்துத் துறையினருக்கு வேண்டுகோள் விடப்பட்டது.

4—6—68 அன்று நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ப. சிவசங்கரன், பறங்கிமலை கண்டோன்மெண்டு துணைத் தலைவர் திரு. வேணு, திரு. வி நடராசன் ஆகியோர் தமிழக அரசு போக்குவரத்துத் துறை இயக்குநரைச் சந்தித்து, மேற்படி கோரிக்கைகளை நிறைவேற்றும்படி கேட்டுக்கொண்டனர்.

உடனடியாக இயக்குநர் 5-6-86 முதல் 21-எப் எண்ணுள்ள பேருந்தைத் திருவான்மியூரிலிருந்து துறைமுகம்வரை விட்டுள்ளார்.

மேலும் திருவான்மியூரிலிருந்து எழும்பூர்வரை பேருந்து விடுவதற்கும், 19-சி பேருந்துத் தடத்தில் கூடுதலாகப் பேருந்து விடுவதற்கும் விரைவில் ஏற்பாடு செய்வ... உறுதி கூறியுள்ளார்.

...க்கையை உடனடியாக ...றிய மாண்புமிகு ...துத்துறை அமைச் ...நருக்கும் பொது ...ர்பில் மகிழ்ச்சியை ...றியையும் உரிமை... ...ன்"

... தி. மு. க. செயலாளர் ... நடராசன் தெரிவித்துக் ... கிறார்.

சீரணியின் பணி

எரியோடு ஆரம்ப பள்ளியில் 5—6—68-ல் சீரணியினரும், ஆசிரியர்களும் வெள்ளையடித்தனர்.

இயந்திரமயக் கொள்கையால் ஏற்படும் பிரச்சினை

அமைச்சர் சாதிக் பாட்சா எச்சரிக்கை

சென்னை, சூன் 10—

"படித்தவர்களிடையே வேலை வாய்ப்பு வசதிகள் மிகக் குறைந்த நிலையிலுள்ள இந்த நேரத்தில் இயந்திரமயமாக்கும் திட்டத்தை அமுலாக்க முயற்சிப்பது, மாநில—மத்திய அரசுகளிடையே மிகுந்த பிரச்சினை களை உண்டாக்கும்"

என்று சுகாதாரத்துறை அமைச்சர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் தமிழ் நாடு, கேரளா, கருநாடகம் ஆகிய மாநிலங்களின் வருமான வரித் துறை ஊழியர்களின் கூட்டு மாநாட்டைத் துவக்கிவைத்துப் பேசுகையில் சுட்டிக் காட்டினார். மேலும் அவர் கூறியதாவது:—

"முதலமைச்சர் அண்ணா அவர்களும், தொழிலாளர் நலத்...

(4-ம் பத்தி பார்க்க)

ஆத்திரமூட்டுகிறார் மொரார்ஜி!

கழக அரசைக் கவிழ்த்து விடலாமெனக் கனவு காண்கின்றனர் காங்கிரசார்!

திருச்சி, சூன் 11—

"நாட்டின் ஒருமைப்பாட்டைக் கருதியும், இந்தி பேசாத பகுதியினரின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டிய தன் அவசியத்தை முன்னிட்டும், அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டியது அவசியமாகும்.

"மொழிப் பிரச்சினை பற்றிய மொரார்ஜியின் அண்... காலப் பேச்சுக்கள், ஆத்திரமூட்டுபவை... என.

"காங்கிரசுக்காரர்கள்—சனநாயக உணர்வுடன்—மக்க... தீர்ப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். சனநாயக மற்ற முறைகளில் கழக அரசைக் கவிழ்த்துவிடலாம் என அவர்கள் கனவு காணக்கூடாது!"

—கி. மனோகரன்

(நாடாளுமன்ற மக்களவை தி. மு. க. குழுத் துணைத் தலைவர்; திருச்சி பொதுக்கூட்டத்தில்)

‘அரசியல் நாகரிகத்தைக் காக்க வேண்டும்’

‘ஒருவரைக் கொன்றுவிடுவதால் கொள்கை செத்துவிடாது’

மாற்றுக் கட்சியினருக்கு என். வி. நடராசன் இடித்துரை

திருத்துறைப்பூண்டி, சூன் 10

“கட்சியில் உறுதி இருக்க வேண்டுமே தவிர வெறி இருக்கக்கூடாது! மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர் என்பதற்காகத் தாக்கக்கூடாது! கொள்கை வேறுபட்டாலும் கட்சி வேறுபட்டாலும் சண்டையிட்டுக்கொள்ளக் கூடாது! தோழமை உணர்ச்சி — உடனிருந்து தொண்டாற்றுவதுதான் அரசியல் நாகரீகமாகும்! பிற கட்சிகளுடன் தோழமையும், அதே நேரத்தில் கட்சியின்பால் உறுதியும் இருக்கவேண்டும்.”

இவ்வாறு அமைப்புச் செயலாளர் திரு. என்.வி. நடராசன் எம்.எல்.சி. அவர்கள், கழகத் தோழர்களுக்கும், மாற்றுக் கட்சியினருக்கும் அறிவுரை கூறினர்.

கடந்த ஏப்ரல் திங்களில் காங்கிரசாரால் தாக்கப்பட்டு உயிரிழந்த கழகத் தோழர் சுப்பிரமணியத்திற்கு மரியாதைத் தெரிவிக்கும் பொருட்டு நடைபெற்ற இறுதிக் கடன் விழாவுக்குத் திரு. என். வி. நடராசன் அவர்கள் தலைமை வகித்தார்.

திருவையாறு தொகுதி தி. மு. கழகச் சட்டமன்ற உறுப்பினர் புலவர் க. முருகையன், துரை வையாபுரி, சண்முகம், அலாவுதீன், துரை மாணிக்கம், கலியபெருமாள், அப்பர்சாமி, இளமறைவன், லத்திப் ஆகியோர் பேசினர்.

அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், தம் உரையில் குறிப்பிட்டதாவது :—

“தோழர் சுப்பிரயமணியனை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தாருக்கு தி. மு. க —தலைமைக் கழகத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்தில் ஆட்சியைக் கைப்பற்றிவிட்டதால் காங்கிரசார் முன்பைவிட வேகமாக — ஆத்திரமாக இருக்கிறார்கள்! கழகத் தோழர்களைத் தாக்கும் படுபாதகச் செயலில் இறங்குகிறார்கள்!

கழகத் தோழர்களைத் தாக்குவதன்மூலம் கழகத்தை அழித்துவிட முடியாது. தூத்துக்குடியில் கே. வி. கே. சாமியையும், நெல்லிக்குப்பத்தில் மஜீதையும் கொன்றார்களே-அதனால் கழகம் அழிந்தாவிட்டது? மாறாக, அங்கெல்லாம் நாடாளுமன்ற-சட்டமன்றத் தொகுதிகளில் கழகம் வெற்றிவாகை சூடியுள்ளது.

சீமான்கள் சாகிறார்கள்— நாம் கவலைப்படுவதில்லை; செல்வந்தர்கள் இறக்கிறார்கள்—நாடு கவலைப்படுவதில்லை; ஆனால் பொதுத் தொண்டாற்றியதால், மாற்றுக் கட்சியினரால் [illegible] குண்டு மறைந்த மா[illegible] பிரமணியத்தால் அ[illegible] பத்துக்கு நட்டம்! [illegible] திற்கு நட்டம்! [illegible]

பொதுத் தொண்[illegible] தோழர் மறைந்தத[illegible] [illegible]களுக்கே மாபெரு[illegible] [illegible]ாகும்! ஆகவே, மக்கள் மன[illegible]ில் அவர் என்றும் நிலைத்து நிற்பார்!

மறைந்த மாவீரன் சுப்பிரமணியனின் குடும்பத்தாருக்குக் கழகத் தோழர்கள் நிதி சேர்த்துத் தரவேண்டும்

தூய தொண்டுக்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட இலட்சியவாதியான சுப்பிரமணியனுக்குச் சிலை எடுப்பதன்மூலம் அவரது மங்காப் புகழ் நிலைத்திருக்கச் செய்யவேண்டும்.”

காங்கிரசு ஆட்சியில் காணப்பட்ட ‘கியூ’க்கள்!

கழக ஆட்சியில் மறைந்தது!

சேலம், சூன் 11—

“காங்கிரசு ஆட்சியில், பங்கீட்டுக் கடைகளின் முன்பு காணப்பட்ட நீண்ட ‘கியூ’ வரிசைகள், 14 மாத கால கழக ஆட்சியில் மறைந்துவிட்டன!

“கழக ஆட்சியில்தான் 4,75,000 டன் அரிசியைக் கொள்முதல் செய்ய முடிந்திருக்கிறது!”

--கே. ஏ. மதியழகன்

(வீரபாண்டி ஊராட்சி ஒன்றிப்பின் டிராக்டரை இயக்கிவைக்கும் விழாவில்)

அமெரிக்க அதிபர்கட்கு நேர்ந்த கதி!

சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் நால்வர்— துப்பாக்கிக்குத் தப்பியவர்கள் மூவர்!

அமெரிக்காவின் 35 குடியரசுத் தலைவர்களில், முதல் 16 பேர் வன்முறைச் செயல்களுக்கு இலக்காகவில்லை!

ஆனால், அடுத்த 19 குடியரசுத் தலைவர்களில நான்கு பேர், கொலை வெறியர்களால் கொல்லப்பட்டனர்! மூவரைக் கொலை செய்ய முயற்சிக்கப்பட்டது!

ஆபிரகாம் லிங்கன், 1865-ல் ஜான் வல்கியூஸ் பூத் என்பவரால் சுடடுக்கொள்ளப்பட்டார்.

ஜேம்ஸ் ஏ கார்பீல், 1881-ல் சார்லஸ் ஜூலியஸ் கிட்டோவ் என்பவரால் கொல்லப்பட்டார்.

வில்லியம் மாக் கிப்ளி, 1910-ல் லியோன் ஜால்கோஸ் என்பவரால் படுகொலை செய்யப்பட்டார்.

ஜான் எப். கென்னடி, 1963-ல், லீ ஹார்வி ஆஸ்வால்டு என்பவரால் துப்பாக்கியால் சுடப்பட்டு மாண்டார்.

தியோடார் ரூஸ்வெல்ட், 1912-ல் அதிபர் தேர்தலில் சுடப்பட்டார்; ஆனால் சாகவில்லை.

பிராங்ளின் ரூஸ்வெல்ட், 1933ல் பதவியில் அமருவதற்குமுன் மியாமியில் சுடப்பட்டார்; ஆனால், காயம் படாமல் தப்பினர்.

ஹாரி எஸ். ட்ரூமன், 1950-ல் கொல்லக் குறி வைத்தார்கள்; ஆனால் பலிக்கவில்லை.

இப்போது இராபர்ட் கென்னடி சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

வன்முறைக்கு இலக்கானேர்!

கடந்த 10 ஆண்டுகளில் சிவில் உரிமை ஊழியர்கள் பலரும், தலைவர்களும் வன்முறைக்கு ஆளாகியுள்ளனர்!

சென்ற ஆண்டில் மட்டும் அமெரிக்காவில், துப்பாக்கிக் குண்டடி பட்டு 5,600 பேர் இறந்தனர்!

விற்பனைக்குத் தடை— ஆனல் துப்பாக்கிகளைக் கட்டுப்படுத்தவில்லை!

மாநிலங்களிடையே கைத்துப்பாக்கிகளை, அஞ்சல் மூலம் விற்பனை செய்வதைத் தடை செய்யும் மசோதா ஒன்றை, அமெரிக்கப் பிரதிநிதிகள் சபை நிறைவேற்றியிருக்கிறது; ஆனல், துப்பாக்கிகளை இம்மசோதா சட்டுப்படுத்தவில்லை.

கட்டுப்பாடுகளை நீக்குவது பற்றிப் பரிசீலனை?

பெங்களூர், சூன் 11

[illegible]அரிசி, கோதுமை ஆகியவற்[illegible] [illegible]மீதுள்ள நடமாட்டக் கட்[illegible] [illegible] நீக்குவது பற்றி [illegible] அறுவடைக் காலத்தில் [illegible]னை செய்ய முடியும்.

[illegible]துதான் அத்தானியங்[illegible] [illegible]கள் குறைந்து வரு[illegible] இந்த நேரத்தில் கட்டுப்பாடுகளை நீக்கினல், வியாபாரிகள்தான் பலனடைவர்.

“எனவே, தற்போதுள்ள கட்டுப்பாடுகளை நீக்கி அவற்றை வியாபாரிகளின் தயவில் விட்டு வைக்க விரும்பவில்லை”

என்று, மத்திய உணவு அமைச்சர் செகசிவன்ராம், செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தமிழக மின் குழு

ஒப்பந்த அறிக்கை

அடியிற் ஒப்பமிட்டவரால் கீழ்க்கண்ட பொருட்களை வாங்குவதற்கான உறையிடப்பட்ட ஒப்பந்தங்கள் (Sealed Tenders) வரவேற்கப்படுகின்றன. முடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் யாவும் கீழே குறிப்பிட்டுள்ள தேதிகளில் 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

வரிசை எண்	ஒப்பந்த விவரப் பிரதி எண்	பொருள்	ஒப்பந்தங்கள் பெற கடைசி தேதி	டேவணித் தொகை
.		7.315 மீ, 8.230 மீ, 9.144 மீ (24 அடி, 27 அடி, 30அடி) கம்பங்கள் செய்வதற்கு இரும்பு கம்பிகளால் கீழ்க்கண்ட இடங்களில் கிரில்கள் செய்து கொடுப்பது (Labour Contract)		
		இடங்கள்		
1.	4/68	மேட்டூர் அணை	25—6—68 அன்று மாலை 3மணி வரை	ரூ. 200/—
2.	5/68	சேலம்		ரூ 200/—
3.	6/68	ஈங்கூர்		ரூ. 200/—
4.	7/68	கிருஷ்ணகிரி		ரூ 200/—
5.	8/68	100ஆம்பியர்/500வால்ட் பியூஸ் கேரியர்	26—6—68 மாலை 3மணி வரை	ரூ. 200/—
6.	9/68	610 மி மீ. (இரண்டுஅடி) நீளமுள்ள குழல் விளக்குகள் 20 வாட்	26—6—68 மாலை 3மணி வரை	ரூ. 200/—

மேலே குறிப்பிட்டுள்ள நேரத்திற்குள்ளும் தேதிகளிலும் வரும் ஒப்பந்தங்கள் யாவும் அன்று மாலை 4 மணி அளவில் விரும்பி வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். ஒப்பந்தங்கள் காலம்கடந்து வந்தாலும், குறிப்பிட்டுள்ள படிவத்தில் (Form) வரத் தவறினலும், டேவணித் தொகைக்கான ரசிது இணைக்கப்படாமல் வந்தாலும் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்த விவர நிபந்தனைகளும் (Tender Conditions) படிவங்களும் (Forms) அடங்கிய ஒவ்வொரு ஒப்பந்த பிரதியும் ரூ. 5.15 காசு விதம் (திருப்பித் தரத்தக்கதல்ல) நேரிலோ, பண அஞ்சல் மூலமாகவோ மேட்டூர் மின் இயக்கத் திட்டதலைமை கணக்காயரிடம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

தேவைப்படும் ஒப்பந்த விவரப் பிரதி எண்ணை அவசியம் குறிப்பிடுதல் வேண்டும். ஒப்பந்தப் பிரதிகள் எக்காரணம் கொண்டும் மாற்றத்தக்கதல்ல. ஒப்பந்தப் பிரதிகள் சாதாரண அஞ்சலில் அனுப்பப்பெறும். அவை கிடைக்கப்பெருவிடில் அதற்குத் தமிழக மின் வாரியம் எவ்விதத்திலும் பொறுப்பேற்காது. ஒப்பந்த விவரப் பிரதிகள் விற்கப்படும். பண அஞ்சல் மூலம் வரும் தொகைக்கான விற்பனைகள் 22—6—68-ம் தேதியுடன் நிறுத்தப்படும்.

மேற்பார்வை பொறியாளர்,

மேட்டூர் மின் இயக்கத் திட்டம், மேட்டூர் அணை தேக்கம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

‘இன்னெருவர் வந்து சொல்லும்வரை காத்திருக்கக் கூடாது’

‘மாநிலங்களின் வளர்ச்சியில் மத்திய அரசு அக்கறை காட்ட வேண்டும்’

டெல்லி அமைச்சரும் கூறுகிறார்

சென்னை, சூன் 8—

“மாநில அரசுகள் தத்தம் பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்கான கோரிக்கைகளைக் கோருவதில் தவறு எதுவுமில்லை; ஆனல், இவை, ஏச்சுக்களுக்கு இடமளித்துவிடக்கூடாது; உள்நோக்கங்களைக் கற்பிப்பதற்கு இடம் கொடுத்துவிடக் கூடாது.

“இந்தியக் கூட்டாட்சியைச் சேர்ந்த மாநிலங்களின் வளர்ச்சி— வாய்ப்புக்களைக் கருத்தில் கொள்ளும் பொறுப்பு மத்திய அரசுக்கு உண்டு; தவிர, இன்னெருவர் வந்து சொல்லும் வரையில் அது காத்திருக்கவும் கூடாது.

“மத்திய அரசுக்கும் -- மாநிலங்களுக்குமிடையில் நடக்கும் கருத்து பரிமாற்றங்கள், ‘காந்திய அறவழி’யில் நடைபெற வேண்டும்.”

இவ்வாறு, மத்திய போக்குவரத்து — கப்பல்துறை அமைச்சர் வி. கே. ஆர். வி. ராவ் அவர்கள், துறைமுக அலுவலகக் கட்டிடங்களைத் திறந்துவைத்துப் பேசுகையில் சுட்டிக்காட்டி விளக்கினர். அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

“தமிழக முதல் அமைச்சர்! எப்போதும் சாதாரண நல்வாழ்வுக்காகக் கவலைப்படுகிறார்; இதனால்தான் அவர்மீது பற்றும் மதிப்பும் வைத்திருக்கிறேன்.

சென்னைத் துறைமுகம் நிச்சயம் பெரும் வளர்ச்சியடையும்; வெளித் துறைமுகம் அமைக்கும் வேலையும் முடிவடைந்துவிட்டால் அது இந்தியாவிலேயே முதல்தரமான துறைமுகமாகத் திகழும்.

சென்னைத் துறைமுகம் வளர்ச்சியடைவதால் அண்டைய மாநிலங்களும் பயன்பெறுகின்றன; எனவே, சென்னைத் துறைமுகம் வளர்ச்சியடைவ எவரும் பொருமைப்படமாட்டார்கள்,

தங்கள் குறைகளை மாநில அரசு எடுத்துக் கூறுவதால் அவர்களை நான் டெல்லி அரசின் எதிரிகள் என்று கூறமாட்டேன்; ‘டெல்லி மீது மக்களுக்கு வெறுப்பு ஏற்படவே டெல்லிமீது குறை சொல்கிறார்கள்’ என்றும் சொல்லமாட்டேன்; இது, மாநில அரசின் உரிமையாகும்.

‘இடுப்பிலிருந்து வேட்டி அவிழும்போது கை உதவுவதுபோல மாநில அரசுக்கு டெல்லி உதவ வேண்டும்’ என்று முதலமைச்சர் கூறினர்; அதை நான் ஒத்துக்கொள்கிறேன்.

மாநிலங்கள் தங்கள் குறைகளைக் கூறுவதற்குமுன்பே அந்தக் குறைகளை உணர்ந்து மத்திய அரசு அதைத் தீர்த்துவைக்க வேண்டும்.

மாநில அரசு—மத்திய அரசு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை அறவழியிலும், பேச்சுவார்த்தைகளின் மூலமுமே தீர்த்துக்கொள்ள வேண்டுமே தவிர, பலாத்காரத்தின் மூலம் அதற்குத் தீர்வு காணபதற்கு முயலக்கூடாது.

தூத்துக்குடித் துறைகம் பெரிய துறைமுகமாக திகழப் போகிறது. சென்னை துறைமுகம் இந்தியாவுக்கு முக்கியத் துறைமுகமாக இருப்பதைப்போல, தூத்துக்குடி, தமிழகத்துக்கு முக்கியத் துறைமுகமாக இருக்கும்.

முதலமைச்சர், அண்ணா ‘தூத்துக்குடித் துறைமுகத்துக்கு அடுத்த ஆண்டில் அதிகப் பணம் ஒதுக்கவேண்டும் என்றார்; அதை ஏற்றுக்கொள்கிறேன். இந்த ஆண்டிலேயே—செப்டம்பர், அக்டோபரில் தனித் திட்டத்தின்கீழ் தூத்துக்குடித் துறைமுகத்துக்கு அதிக பணம் ஒதுக்கப்படும்.”

கிளர்ச்சி நாகர்கள் தேர்தலில் ஈடுபடுவர்

வி. கிருஷ்ணமூர்த்தி தகவல்

சென்னை, சூன் 11—

“நாகாலந்தில் வசிக்கின்ற கிளர்ச்சி நாகர்கள், நேரடியாக அல்லது மறைமுகமாக அடுத்த ஆண்டு சனவரியில் நடைபெறவிருக்கும் தேர்தலில் ஈடுபடுவர்”

என்று நாடாளுமன்ற மக்களவை தி.மு.க. உறுப்பினர் வி. கிருஷ்ணமூர்த்தி, செய்தியாளர்களிடம் கூறினர்.

நாகாலாந்தில் உள்ள கிளர்ச்சி நாகர்களின் தலைவர்களைச் சந்தித்துப்பேசியபின் அவர் இக்கருத்தை வெளியிட்டார்.

அமைச்சர் மு. கருணாநிதி பிடித்த திருடன்

ஏற்கனவே பல வழக்குகளில் தண்டனை பெற்றவனும்

திருச்சி, சூன் 11—

தாம் பயணம் செய்துகொண்டிருந்த இரயில் பெட்டிக்குள் நுழைந்த திருடன் ஒருவனைப் பிடித்துப் போலீசாரிடம் ஒப்படைத்தார்—பொதுப் பணித் துறையமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள்.

இந்த நிகழ்ச்சி அமைச்சர் அவர்கள் திருச்சியிலிருந்து ஞாயிற்றுக்கிழமை இரவு திருநெல்வேலி எச்ஸ்பிரஸ் வண்டியில் சென்னை வந்துகொண்டிருந்தபோது நடந்தது.

நள்ளிரவு 2-மணிக்கு இரயில் வண்டி அரியலூரைத் தாண்டி ஓடக்கோயில் என்னும் இரயில் நிலையத்தை நோக்கி வந்துகொண்டிருந்தபோது, ஒருவர் தாவி ஏறி இரயில் பெட்டிக்குள் நுழைந்ததைப் பார்த்த அமைச்சர், 'அவன் திருடனாகத்தான் இருக்கவேண்டும்' என்று கருதி, அபாயச் சங்கிலியைப் பிடித்து இழுத்து இரயிலை நிறுத்தினார். உடன் அமைச்சரின் மெய்காவலர்களும், ஏனைய அதிகாரிகளும் ஓடி வந்தனர்; அவர்கள் அவனைப் பிடித்துப் போலீசிடம் ஒப்படைத்தனர்.

பிடிபட்டவன் பெயர் ஆல்பர்ட் என்றும், திருச்சியைச் சேர்ந்தவன் என்றும், அவன் ஏற்கனவே பல திருட்டு வழக்குகளில் தண்டனை பெற்றவன் என்றும் தெரியவருகிறது.

அவனை விருத்தாசலம் போலீசார் காவலில் வைத்து, வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

மதுரையில் கழகக் கூட்டங்கள்

மதுரை வட்டத்தில் நடைபெறவிருக்கும் கழகக் கூட்டங்கள் பற்றிய விவரங்களை மதுரை நகர் தி. மு. க. துணைச் செயலாளர் எம். எம். முத்தரசு அவர்கள் பின்வருமாறு அறிவிக்கிறார்:—

13—6—68-ல், 25-வது வட்டாரம் வடக்குவாசி வீதியில் சென்னை எம். குமார் பேசுவார்.

15—6—68-ல், 44-வது வட்டாரம் பழைய குயவர் பாளையம் ரோடில் (இலட்சுமி டாக்கீசுக்குப் பின்புறம்) மணி—சாமி குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

சுப்பிரமணியபுரத்தில் சி. தமிழரசி பேசுவார்.

16—6—68-ல், 40-வது வட்டாரம் தவிட்டுச்சந்தைக்கு அருகில் திராவிடமணி பேசுவார்.

18-வது வட்டாரம் மோதிலால் ரோட்டில் எஸ். முத்து எம்.எல்.சி. பேசுவார்.

17—6—68-ல், 9-வது வட்டாரம் கீழச் சந்தைப்பேட்டை கொண்டித்தொழுத் தெருவில், எஸ். முத்து எம்.எல்.சி., திருவை அண்ணாமலை ஆகியோர் பேசுவர்.

20—6—68-ல், 29-வது வட்டாரம் தொட்டியன்கிணற்றுத் தெருவில் நன்னிலம் அ. நடராசன் பேசுவார்.

21—6—68-ல், 45-வது வட்டாரத்தில் அனுப்பானடியில், திருவை அண்ணாமலை பேசுவார்.

20-வது வட்டாரம் மேலப்பொன்னகரத்தில் சு. தென்கோவன் பேசுவார்.

குறிப்பு:—இக்கூட்டங்களில், நகர தி. மு. க. செயலாளர் திருப்பதி பி.ஏ.பி.எல்., நகர துணைச் செயலாளர் எம். எம். முத்தரசு கலந்துகொள்வார்.

உயர் நீதிமன்ற நீதிபதிகள் எண்ணிக்கை உயரும்

மேலும் இருவரை நியமிக்க டெல்லி அனுமதி

திருச்சி, சூன் 11—

தமிழக உயர் நீதிமன்றத்திற்கு மேலும் இரண்டு புதிய நீதிபதிகளை நியமித்துக்கொள்ள மத்திய அரசு அனுமதி வழங்கியிருப்பதாக சட்டத் துறை அமைச்சர் திரு. மாதவன் இங்கு தெரிவித்தார்.

இதுபற்றி அமைச்சர் செய்தியாளர்களிடம் மேலும் கூறியதாவது:—

"தற்போது தமிழக (சென்னை) உயர் நீதிமன்றத்தில் 14 நீதிபதிகள் உள்ளனர். புதிதாக இரண்டு பேர்களை நியமித்தால் நீதிபதிகள் எண்ணிக்கை 16 ஆக உயரும்.

புதிய நீதிபதிகளாக யார் யாரை நியமிப்பது என்பது பற்றிக் கடிதப் போக்குவரத்து நடைபெறுகிறது."

காயிதே மில்லத் பிறந்தநாள் விழா

லால்பேட்டை காயிதே மில்லத் இளைஞர் மன்றத்தின் சார்பில், காயிதே மில்லத் பிறந்த நாள் விழா, 12-6-68 மாலை 6 மணிக்கு ஷைகுல்மில்லத் நினைவு அரங்கில்; தலைவர்: எஸ். எஸ் முகம்மது நூர்; பேசுவோர்: எம். எம். பீர்முகம்மது, ஜே. ஏ. ஜப்பார், கே. என் இராமச்சந்திரன் எம்.எல்.ஏ., வி. வி. சாமிநாதன் பி.எஸ்.சி, பி.எல், எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி, செ. முகம்மது, ஜே எம். ஜக்கரியா ஆ ஷபிஞா ரகிமான்.

தமிழக மின் குழு

டெண்டர் அறிக்கை

தமிழக மின்சார வாரியத்தின் சார்பாகக் கீழ்க்காணும் பொருள்கள் வாங்குவதற்கான மூடி முத்திரையிட்ட விலையொப்பங்கள் (டெண்டர்ஸ்) அடியிற் கையொப்பமிட்டவரால் அவரது அலுவலகத்தில் 29—6—68 பிற்பகல் 1 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும்.

வரிசை எண்	சாற்றுக் குறிப்பு எண்	பொருள்	அளவு
1.	T2/TWME1/68-69	50 செ. மீ × 38 செ. மீ. × 16 மி மீ அளவு தேக்கு மர மீட்டர் போர்டுகள்	7,000
2.	T2/TWME2/68-69	45 செ. மீ. × 30 செ. மீ. × 16 மி.மீ. அளவு தேக்கு மர மீட்டர் போர்டுகள்	10,000

மேற்படி பொருள்களைப் பற்றிய விவரங்களும் விலைப் புள்ளிகளைக் குறித்து அனுப்புதற்குரிய தாள் ஒன்றும் அடங்கிய ஒப்புச்சாற்றுக் குறிப்புப் பிரதிகள் (ஸ்பெசிபிகேஷன் காபிஸ்) வேண்டுவோர் பிரதி ஒன்றுக்கு ரூ. 5 15 (விற்பனை வரி உள்பட) இவ்வலுவலகத்தில் செலுத்தியோ, அல்லது 'தலைமைக் கணக்கர், தென் ஆற்காடு மின் அமைப்பு, விழுப்புரம்' என்ற முகவரிக்கு மணியார்டர் அல்லது டிமாண்டு டிராப்டு மூலமாகவோ அல்லது நேரிலோ செலுத்தி அவற்றை 14—6—68 தேதியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

மேற்படி தொகை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரப்படமாட்டாது. இத்தொகையை மணியார்டர் மூலமாக அனுப்புவோர் தமது முகவரியையும், தேவையான பிரதிக்குரிய சாற்றுக் குறிப்பு எண்ணையும் (ஸ்பெசிபிகேஷன் நெம்பர்) தெளிவாகக் குறிப்பிட வேண்டும். பிரதிகள் சாதாரண அஞ்சல் மூலமாகவே அனுப்பப்படும். அவை உரியவர்க்குச் சேர்க்கப்படாவிட்டால் அதற்கு இவ்வாரியம் பொறுப்பல்ல.

உரிய தாள்களில் அனுப்பப்படாத விலையொப்பங்களும், குறித்த காலம் தவறி வருபவையும் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. ஒருவர் பெயரில் வாங்கப்பட்ட விலையொப்பங்களும், சாற்றுக் குறிப்புகளும் மற்றொருவர் பயன்படுத்துவது செல்லாது. டேவணித் தொகை (Earnest Money Deposit) இல்லாமல் அனுப்பப்படும் விலையொப்பங்களும் குறித்த தேதியில் வந்து சேராத விலையொப்பங்களும் கண்டிப்பாக ஏற்கப்படமாட்டா.

விலையொப்பங்கள் 29—6—68 அன்று பிற்பகல் 3 மணிக்கு இவ்வலுவலகத்தில் வந்துள்ள விலையொப்பதாரர்கள் (டெண்டரர்ஸ்) முன்னிலையில் கீழ்க்கண்டவரால் பிரிக்கப்படும்.

மேற்பார்வை பொறியாளர்,
தென்னாற்காடு மின் அமைப்பு, விழுப்புரம்

கூட்டு அரசியல் அமைப்பில் மாநில அரசுகளின் நிலைமை

அயல்நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்துகொள்ள முடியாதாம்

மத்திய அரசின் சட்டத் துறை அமைச்சர் விளக்கம் தருகிறார்

கோச்சி, சூன் 11—

"கூட்டு அரசியல் அமைப்பில் எந்த மாநில அரசும், அயல்நாட்டு அரசுகளுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்துகொள்ள முடியாது!

"ஆனால் மாநில அரசுகள், அயல்நாடுகளின் உதவி — ஒத்துழைப்புடன் தொழில்களை ஏற்படுத்திக்கொள்வதற்குத் தடை கிடையாது!

"ஆனால், நிதி ஒதுக்கீட்டில் மட்டும் மத்திய அரசின் ஒப்புதல் அவசியம்; ஏனென்றால், மத்திய அரசுதான் நிதி ஒதுக்க வேண்டும்"

என்று மத்திய அரசின் சட்டத் துறை அமைச்சர் கோவிந்த மேனன், செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

90 துறைகளில் டில்லிக்கு அதிகாரமாம்

"தற்போது, 90 துறைகளில் மத்திய அரசுக்கு அதிகாரங்கள் உள்ளன. இத்துறைகளில் ஏதேனும் சிலவற்றை மாநில அரசுகளின் அதிகாரத்திற்கு உட்படுத்தவேண்டும் என்று எண்ணம் தெரிவிக்கப்பட்டால் அந்த அடிப்படையில், பொது விவாதம் நடத்த முடியும்"

என்று அமைச்சர் கோவிந்த மேனன் தெரிவித்திருக்கிறார்.

மாறுதல்களைச் செய்ய முடியாதெனக் கூறவில்லையாம்

"மத்திய அரசுக்கு உள்ள அதிகாரங்கள், மாநில அரசுகளுக்கு உள்ள அதிகாரங்கள் பற்றிய நிலைமையினையொட்டி அரசியல் சட்டத்தில் மாறுதல்களைச் செய்ய முடியாது என்று மத்திய அரசு இறுதியாகக் கூறவில்லை"

என்றும் சட்டத்துறை அமைச்சர் சூழ்நிலையையொட்டிக் கூறியிருக்கிறார்.

கண்ணம்மா--தங்கராசு கலை நிகழ்ச்சிகள்

சூன் 12: [illegible]ாத்தனூர்; 13: உள்ளிக்கோட்டை; 15: பெருந்துறை; 16: திண்டுக்கல்; 17: வழுதியூர்; 18: இ. வெள்ளனூர்.

நடக்க இருப்பவை

12--6--68

திருமணமேடு

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 6-30 மணிக்கு; தலைவர்: சா. வெங்கடாசலம்; பேசுவோர்: செ. கந்தப்பன் எம்.பி., அன்பில் தர்மலிங்கம், மு. க. து. நடராசன் எம்.எல்.ஏ., சிங்காரம், தியாகராசன், அறிவன், ப. சம்பந்தம் பி.ஏ.

தஞ்சை

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு பில்லுக்காரத் தெருவில்; தலைவர்: பி. கோவிந்தராசன்; பேசுவோர்: க. இராசா முகம்மது பி.ஏ., டி. பி. கண்ணன், மற்றும் பலர்.

நாமக்கல் தி.மு.க. கிளை தேர்தல்கள்

15-6-68 அன்று நடைபெறும்

சேலம் மாவட்டம் நாமக்கல் தி. மு. க. கிளைத் தேர்தல்கள் 15-6—68 சனிக்கிழமை காலை 10-மணிக்குத் தலைமைக் கழகச் சார்பான தேர்தல் ஆணையாளரின் தலைமையில் நடைபெறும்.

ஆணையாளர் பெயர்; இடம் முதலியன பின்னர் அறிவிக்கப்படும்.

—தலைமைக் கழகம்
(தி. மு. க.)

குடிசைகள்மீது திடீர் அக்கறை காட்டும் தமிழகக் காங்கிரசாருக்கு டெல்லி அமைச்சரே தரும் 'சர்ட்டிபிகேட்'!

சென்னை, சூன் 11—

"தமிழகத்திலுள்ள காங்கிரசுக்காரர்கள், தங்களுடைய மனதைத் தொட்டுப் பார்த்து, 'எவ்வளவு கு[illegible]களுக்கும், சேரிகளுக்கும் நாம் சென்றிரு[illegible]' என்று கேட்டுக்கொள்ள வேண்டும்; அப்படிச் [illegible]தால்தான், காங்கிரசை, பரந்த அடிப்படையில் [illegible] நிறுவனமாக்க முடியும்.

"தமிழ்நாடு காங்கிரசுக்கு தி. மு. க. ஒரு பெரிய அறைகூவல் என்பதற்குமேல் நான் அதிகமாக ஒன்றும் சொல்வதற்கில்லை; ஏழை மக்களுடன் அதிகத் தொடர்பைக் காங்கிரசுக்காரர்கள் ஏற்படுத்திக் கொண்டாலன்றி இந்த அறைகூவலைச் சமாளிக்க முடியாது!"

--செகசீவன்ராம்
மத்திய விவசாய அமைச்சர்

"கோ. ஆப்டெக்ஸ்"
எல்லா வகை கைத்தறித் துணி விற்பனையின் பேரில் அரசாங்க
விசேஷ தள்ளுபடி
10%
9—6—68 முதல் 15—6—68 வரை

இந்தவிசேஷதள்ளுபடி இந்தியாவெங்கிலுமுள்ள எல்லா "கோ-ஆப்டெக்ஸ்" விற்பனை நிலையங்களிலும், பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலும் கிடைக்கும்.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்,
சென்னை-8
ELEGANT

ரோஜா

பாக்கு &
புகையி[illegible]

N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை,13) அச்சிட்டு [illegible]